# தமிழ் நாடு சட்டப் பேரவை

## புதன்கிழமை, 1973 நவம்பர் 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். 449 ஆம் எண்ணுள்ள திரு. பாலசுந்தரம் அவர்களுடைய வினாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

### 1. தகவல் கோரல்

**உறுப்பினர்கள் பார்வையாளருக்கு அனுமதிச் சீட்டு வழங்குவது பற்றி பேரவைத்துறை உறுப்பினர்களுக்கு அனுப்பிய செய்தித்தாள் குறித்து**

THIRU K. T. K. THANGAMANI : Mr. Spaaker, Sir, before the questions are taken up, I wish to say one thing. We are supplied with an Information Document and that is not signed either by the Speaker or Deputy Speaker and it is only singed by the Secretary. Now the direction that is given there is something extraordinary. Each Member is allowed only one visitor. I can understand that addresses of the Visitors should be given. But if only one visitor is allowed, supposing the members have their family or others with husband, wife and others, then we will have to get permits from other hon. Members of the House.

Another thing, I strongly take objection to is that the name of the Member will have to be written in block letters under his signature, and in Tamil, it is much worse. Our signature is there known to the department and it can be verified whether it is our signature or forged. If I am asked to write out my name in block letter, I am sorry it is strange and this is humiliating also. This type of circulars if they are to be sent like this. I do not know whether this was sent under your direction or the Secretary has on his own sent it. ............

[1973 நவம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுகுறித்து என்னுடைய அறையிலே பேசிக்கொள்ளலாம். அவையிலே பேச வேண்டியதில்லை.

## 2. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### தாமிர பட்டயங்கள் வழங்கல்

*449. வின.—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திர தினத்தன்று, சுதந்திர போராட்ட வீரர்களுக்குச் சென்னையில் தாமிர பட்டயம் வழங்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு பேருக்குத் தாமிர பட்டயம் வழங்கப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(ஆ) சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த 273 பேருக்கும் இதர மாவட்டங்களைச் சேர்ந்த 30 பேருக்கும் சென்னை நகரத்தில் தமிழ்நாடு அரசின் பட்டயம் வழங்கப்பட்டது. மேலும், சென்னை மாவட்டம் உட்பட, மாநிலம் முழுவதிலும் 4,749 பேருக்குத் தமிழ்நாடு அரசின் பட்டயம் வழங்கப்பட்டது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட பட்டயம் எங்கே செய்யப்பட்டது நம்முடைய மாநிலத்திலா? அல்லது வேறு மாநிலத்திலா? அதனுடைய விலை என்ன? அந்தப் பட்டயத்தில் எந்த மொழியில் வார்த்தைகள் இருந்தன என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே இந்தப் பட்டயத்தைத் தயாரித்தவர்கள் நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள 'டான்ஸி' நிறுவனத்தார் ஆவார்கள். அவர்கள் தயாரித்த இந்தப் பட்டயம் ஒவ்வொன்றின் விலை சுமார் 65 ரூபாயாகும். 6.5 இலட்ச ரூபாய் இதற்கு ஆன மொத்தச் செலவாகும். இதில் நம்முடைய மொழியிலேயே தமிழிலேயேதான் எழுதப்பட்டிருக்கிறது.